# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணைய இதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஏப்ரல் 20, 2019

Weekly E-paper • April 20, 2019




# மீண்டும் தலைதூக்கும் சாதி, மத வன்முறைகள்!

-சுப. வீரபாண்டியன்

## மோ(ச)டி ஆணையம்




‘பைந்தமிழ்’ பாபு

## நாடாளுமன்றம்



தேர்தல் பணிகளில் பேரவை

## பஃபூனின் அரசியல்!



தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணைய இதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஏப்ரல் 20, 2019 Weekly E-paper ● April 20, 2019


# மீண்டும் தலைதூக்கும் சாதி, மத வன்முறைகள்!

● சுப. வீரபாண்டியன்

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன், தமிழக விடுதலைப் போராளி தமிழரசன், பொன்பரப்பியில், உளவுத் துரையின் தூண்டுதலால், கொள்ளையன் என்று கருதப்பட்டு, கல்லால் அடித்துக் கொல்லப்பட்டான். அவன் வன்னியர் சமூகத்தில் பிறந்தவன். சாதி அமைப்பை எதிர்த்துப் போராடியவன். தமிழ்த்தேச விடுதலைக்காகக் குரல் கொடுத்தவன். எந்த மக்களுக்காகப் போராடினானோ, அந்த மக்களாலேயே கள்வன் என்று கருதப்பட்டுக் கொல்லப்பட்டான்.

அன்று தமிழரசனைக் கொன்ற கற்கள் இன்னும் மீதமிருக்கின்றன போலும்! இப்போது அதே பொன்பரப்பியில், வன்முறை மீண்டும் வெடித்திருக்கிறது. ஏழை எளிய மக்களின் வீடுகள் மட்டுமில்லை, சாதி எதிர்ப்புணர்வு, மனிதநேயம் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

வன்னியர் சமூக மக்கள் அனைவரும் வன்முறையாளர்கள் இல்லை. அவர்கள் உழைப்பாளிகள், அவர்களுள் மிகப் பலர் ஏழைகள். ஆனால் அவர்களை ஆட்டிப் படைக்கும் தலைவர்கள் சிலர் இந்த வன்முறையைத் தூண்டுகின்றனர். தேர்தலுக்கு முந்திய நேரத்தில், மருத்துவர் ராமதாஸ், அவரின் மகன் மருத்துவர் அன்புமணி இருவரும் பேசிய பேச்சுகளே வன்முறைக்கு வித்திட்டன என்று கூற வேண்டும். மக்களிடம் சாதி வெறியைத் தூண்டி, அவர்களைக் கலவரத்தில் ஈடுபடச் செய்வதன் மூலம், அந்தச் சமூகம் ஒரு பயனையும் பெறவில்லை. மாறாக, இருப்பதையும் இழந்து கொண்டுள்ளது. இதுபோன்ற வன்முறை, கலவரங்களால் பயன்பெறுகின்றவர்கள், அந்தக் கட்சியின் தலைவர்கள் மட்டுமே.

இப்போது சாதிக் கலவரம் பொன்பரப்பியிலிருந்து, புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதிக்கும் பரவியுள்ளது. தங்கள்



பின்னால், மத்தியில் ஆளும் கட்சியான, பாஜக இருக்கிறது என்பதும், பாமக தலைவர்களின் வன்முறைப் பேச்சுக்கு ஒரு காரணம்.

கோவை, திருப்பூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில், ஆர்.எஸ்.எஸ். கிளைகள் படர்ந்து கொண்டுள்ளன. அங்கு அவர்கள் முழுநேரமாக வேலை செய்து கொண்டுள்ள காட்சிகளைத் தேர்தல் சுற்றுப்பயணத்தின் போது பார்க்க முடிந்தது. மத அடிப்படையில் கலவரங்களைத் தூண்டுவதும், திமுக விற்கு எதிராக மக்களின் மனநிலையை உருவாக்குவதும் அவர்களின் அடிப்படை நோக்கமாக உள்ளது.

திட்டமிட்டு அவர்கள் வேலை செய்கின்றனர். வெறுமனே உணர்ச்சி வயப்பட்டு நாம் எதிர்வினை ஆற்றுவதில் எந்தப் பயனுமில்லை. முற்போக்குச் சிந்தனையாளர்கள் ஒன்றுகூடிச் சிந்திக்க வேண்டிய அபாயகரமான சூழலில் நாம் வாழ்கின்றோம். இது அச்சுறுத்தல் அன்று, மிக மிகத் தேவையான எச்சரிக்கை! ●


## கலைஞரின் நெஞ்சுக்கு நீதி

தோழர் சுப. வீரபாண்டியனின்

தொடர் சொற்பொழிவு - 7

25.04.2019 வியாழன் மாலை 6.30 மணி,

சென்னை, பெரியார் திடல்

அனைவரும் வருக!



# நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை



குன்னூர் : சுப.வீரபாண்டியன்



கோத்தகிரி : பொள்ளாச்சி மா.உமாபதி



திண்டுக்கல் : வேடசந்தூர் ரவி, புலேந்திரன்



மானமதுரை : சுபவீ, ஆ.சிங்கராயர்



மதுரை : மாவட்டச் செயளாலருடன் ஜெயம்பெரும்மாள்



வடசென்னை : முத்தையா குமரன், மகாலட்சுமி


## கருஞ்சட்டைப் பதிப்பகம்

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**


## சோலையார்ப்பேட்டை



திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதி, சோலையார்ப்பேட்டை, தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன்.

## ஈரோடு



ஈரோடு, மதிமுக நாடாளுமன்ற வேட்பாளர் கணேச மூர்த்தியின் வெற்றிக்காகத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் மாவட்டச் செயளாலர் தமிழ்க்குமரன் வாக்குச் சேகரித்த போது.

## லால்குடியில் திருமணம்



10.4.2019 அன்று, லால்குடியில், தோழர் சுபவீ தலைமையில் நடைபெற்ற, அருண்குமார்- சுவாதி ஆகியோரின் சாதிமறுப்பு, சுயமரியாதைத் திருமண விழாவில், தோழர்கள் கார்த்திக், ஆங்கரை பைரவி, பிரவீன்.


தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்


## ஒரு பஃபூனின் அரசியல்!

ஒரு திரைப்படம் என்றால் அதில் நகைச்சுவைக் காட்சிகள் இருக்கும், நகைச்சுவை நடிகர் இருப்பார்.

சர்க்கஸ் நடைபெறும் பொழுது அங்கேயும் ஒரு நகைச்சுவைக் கோமாளி இருப்பார். இந்தத் தொழில்முறை நகைச்சுவையாளர்களை 'பஃபூன்' என்று சொல்வார்கள்.

தமிழ்நாட்டிலும் அப்படி ஒரு பஃபூன் இருக்கிறார். அவர் தொழில்முறை பஃபூன் இல்லை, ஓர் அரசியல் கோமாளி, பெயர் ரஜினிகாந்த்.

திடீரென ரசிகர்களைக் கோடம்பாக்கத்தில் கூட்டுவார். ஆலோசனை கேட்பார். நான் அரசியலில் குதிக்கத் தயாராகி விட்டேன் என்பார். பணம் சம்பாதிக்க யாரும் என் அரசியலுக்கு வர வேண்டாம் என்பார். அவரின் அரசியல் பிரவேசம் குறித்துச் செய்தியாளர்கள் கேட்டால் "எல்லாம் ஆண்டவன் பாத்துக்குவார்" என்று ஓடிவிடுவார், பாவம் ரசிகர்கள்.

2017 டிசம்பரில், அவர் கூட்டிய ரசிகர் கூட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றம், சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிடப் போவது போலப் பேசினார். ஓராண்டுக்கும் மேலாகிவிட்டது. எந்த ஓர் அசைவும் இல்லை. கடைசியில் நாடாளுமன்றத் தேர்தலைக் கை கழுவி விட்டார், பாவம் ரசிகர்கள்.

இப்பொழுது "சட்டமன்றத் தேர்தல் எப்போது நடந்தாலும் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனது ரசிகர்களை ஏமாற்ற மாட்டேன்" என்று பேசியிருக்கிறார்.

முதலில் தேர்தல் என்பது மக்களுக்காகவா அல்லது ரசிகர்களுக்காகவா என்பதில் பாவம் ரஜினி குழம்புகிறார்.

ரசிகர்களும் குழம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள், இந்த ஆளு சட்டமன்றத் தேர்தல் வந்தவுடன் எப்படி பல்டி அடிக்கப் போகிறாரோ என்று.

இவர் அரசியலில் மிகச்சிறந்த பஃபூன் வேலைகளைச் செய்வார்.

மோடி ஆட்சிக்கு வந்தால் நதிகளை எல்லாம் இணைத்துத் தண்ணீர் பிரச்சனைகளைத் தீர்த்துவிடுவார் என நம்புகிறார். அப்படியானால், கடந்த 5 ஆண்டு ஆட்சியில் மோடி என்ன செய்து கொண்டிருந்தார் என்பதற்கு பதில் இல்லை.

தவிர அனைத்து நதிகளையும் இணைக்க முடியுமா என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாதவராக இருக்கிறார்.

இவர் நடிக்கும் திரைப்படத்தில் இவர் ஒருவரே 100 பேர்களை அடித்துக் கிழித்துவிடுவார். ஆனால், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில், பொதுமக்களில் 13 பேர் இறந்து போனார்கள். போராடியவர்களை வன்முறையாளர் என்கிறார்.

இப்பொழுது கூட வாக்குப் பதிவின் விழுக்காடு குறைந்ததற்கு என்ன காரணம் என்ற செய்தியாளர் கேள்விக்கு, "விடுமுறை என்பதால் பலர் அவரவர் ஊருக்குச் சென்றுவிட்டார்கள் என்று நினைக்கிறேன்" என்று வாக்குபதிவு குறைந்ததற்குத் தத்துவார்த்த விளக்கம் சொல்லியிருக்கிறார்.

இந்த அரசியல் பஃபூனை அவரின் ரசிகர்கள் தாங்குகிறார்களோ இல்லையோ, தமிழ்நாடு தாங்காது.

# மோ(ச)டி ஆணையம்!

**‘பைந்தமிழ்’ பாபு**

நாட்டின் ஜனநாயகத் திருவிழாவான தேர்தலை நடத்துவதிலும் அதற்கான முன், பின் செயல்பாடுகளிலும் தேர்தல் ஆணையம் நடுநிலை தவறாமல் செயல்பட வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பு மக்களின் விருப்பமாக உள்ளது.

மத்திய, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டுக்குள் வராத தன்னாட்சி பெற்ற நிறுவனம் இந்தியத் தேர்தல் ஆணையம். குடியரசுத் தலைவரில் தொடங்கி குடியரசு துணைத் தலைவர்,பிரதமர், எம்.பி., எம்எல்ஏக்கள் வரையிலான மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் அனைத்துக்கும் தலைமைத் தேர்தல் ஆணையமே பொறுப்பு.

ஆனால் இத்தகைய வலிமை வாய்ந்த சுயாட்சி அமைப்பு பிரதமர் மோடியின் கைப்பாவையாக மாறிவிட்டது என்பதைத் தான் தமிழகத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் உணர்த்தியுள்ளது.

தேர்தல் நடக்கும் மாநிலங்களில் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தவுடன் மாநிலத்தில் காவல்துறை, நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் கட்சி சார்பு அதிகாரிகள், குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நிர்வாகிகள் இடமாற்றம் செய்யப்படுவர். ஆனால் இந்த முறை அது மாதிரியான இடமாற்றம் சொல்லிக்கொள்ளும்படி நடக்க வில்லை தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறை தொடங்கிய நாள் முதல் வாக்குப் பதிவு முடியும் வரையிலும் ஆளும் அதிமுகவிற்குச் சாதகமாகவே தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் இருந்தன.




பறக்கும் படைச் சோதனைக்குப் பயந்து பொது மக்களும் வணிகர்களும் சாமானியர்களும் தங்கள் பணத்தைக் கொண்டு செல்ல முடியாமல் சிரமத்திற்குள்ளாயினர் ஆனால் ஆளும் அதிமுகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் காவல்துறை துணையோடு பணப்பட்டுவாடாவை கனகச்சிதமாக செய்தன. இதனைக் கடைசி வரை தேர்தல் ஆணையம் கண்டுகொள்ளவே இல்லை.

தேர்தல் ஆணையத்தின் மீது வைக்கப்படும் மற்றொரு முக்கியக் குற்றச்சாட்டு, எதிர்க்கட்சியினர் வீடுகளில் மட்டும் நடத்தப்பட்ட வருமான வரித்துறைச் சோதனை. பாஜக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் எந்த ரெய்டையும் நடத்தவில்லை. ஆனால், காங்கிரஸ் மற்றும் கூட்டணி வைக்காத மாநிலக் கட்சிகளின் வீடுகளில் சோதனை நடந்துள்ளதாகக் குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது. வேலூரில் துரைமுருகன் வீட்டில் வருமான வரிச் சோதனை நடத்தியதோடு தேர்தலையும் ரத்து செய்த தேர்தல் ஆணையம், துணை முதல்வர் ஓபிஎஸ் மகன் போட்டியிடும் தேனியில் பணப் பட்டுவாடாவைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்காதது ஏன்? தமிழகம் முழுவதும் அதிமுகவினர் பண விநியோகம் செய்ததற்கு ஆதாரமாகப் பல வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையிலும் திமுக புகார் அளித்தும் தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்காதது அதன் ஒரு பக்கச்சார்பைத்தானே காட்டுகிறது.

முதல்வர் எடப்பாடி பழனிசாமி ஆரத்தி எடுக்கும் பெண்ணுக்கு 2 ஆயிரம் கொடுக்கிறார். கேட்டால் வாழைப்பழம் வாங்கியதற்குப் பணம் கொடுத்தேன் என்கிறார் கொஞ்சம் கூட கூச்சப்படாமல் . ஒரு சீப்பு வாழைப்பழம் இரண்டாயிரம் ரூபாயா? இதுதொடர்பாகத் திமுகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் புகார் கொடுத்தும் தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கரூர் காங்கிரஸ் வேட்பாளரான ஜோதி மணி வேட்பு மனுத் தாக்கலில் தொடங்கி இறுதிக் கட்டப் பரப்புரை வரை தேர்தல் அதிகாரிகளோடே போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் என்றால் இந்த தேர்தல் ஆணையம் எந்த அளவு ஆளும் தரப்பிற்குச் சாதகமாக நடந்து கொண்டது என்பது புரியும்.

இறுதிக் கட்டப் பிரச்சாரம் முடிவடைந்த நிலையில் தூத்துக்குடித் திமுகழக வேட்பாளர் கவிஞர். கனிமொழி வீட்டில் ஐடி ரெய்டு நடத்தியதால் தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டை பொதுமக்களே கடுமையாக விமர்சித்ததைப் பார்க்க முடிந்தது.

ஆனால் மறுபக்கம் தேர்தல் பரப்புரையில் வாக்குச் சாவடிகளைக் கைபற்றுவோம் என்று அன்புமணி பேசிய வீடியோ காட்சிகளை வைத்துத் தேர்தல் ஆணையரிடம் திமுகவினர் புகார் மனு அளித்தும் அதைக் கண்டு கொள்ளவில்லை தேர்தல் ஆணையம் . ஆனால் அன்புமணி சொல்லியபடி தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொம்மிடி பகுதியில் உள்ள 10 வாக்குசாவடிகளை கைப்பற்றிய பாமகவினர் கள்ள ஓட்டுப் போட்டதாகச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளது.

மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளிலும் ஆணையம் மெத்தனம் காட்டுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக பெரும் ஆவலோடு சென்னையிலிருந்து தங்கள் சொந்த ஊருக்குச் செல்லவிருந்த வாக்காளர்களுக்குச் சிறப்புப் பேருந்துகளை இயக்கத் தவறிய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடும் அங்கே வெள்ளம் போல் கூடிய மக்களைத் தடியடி நடத்திக் கலைத்த காவல்துறையின் அராஜகமும் கடும் கண்டனத்துக்குரியன. இதனாலேயே பல இடங்களில் சென்ற தேர்தலை விட வாக்குப்பதிவு குறைந்துள்ளது.

பொதுமக்கள் 100% வாக்களிக்க விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யும் தேர்தல் ஆணையம் 100% அல்ல அதில் பாதி அளவாவது நேர்மையாக நடந்ததா என்பது கேள்விக்குறியே!

தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுவதும் தேர்தல் ஆணையச் செயல்பாடுகள் நியாயமற்றவை என்பதை உணர்ந்த ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் ராணுவத் தளபதிகள், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு, எழுதியுள்ள கடிதத்தில் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு முற்றிலும் சீர்குலைந்து விட்டதாகவும் மோடியின் கைப்பாவையாகச் செயல்படும் தலைமைத் தேர்தல் ஆணையம் அதன் நம்பகத்தன்மையை இழந்து விட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தேர்தல் அறிவிப்பு, தேர்தல் நடத்தை விதிமுறை, பாரபட்சமான நிலைப்பாடு, இயந்திரக் கோளாறு, வாக்குப்பதிவில் குளறுபடி, வாக்குச்சாவடிகளில் வசதிக் குறைவு, என முற்றிலுமாகத் தோற்றுப் போயுள்ள இந்த தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் தான் வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளன. ஆனால் ஆணையமோ மோடியின் கட்டுப்பாட்டில் அல்லவா உள்ளது. ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.